

செயலாற்றுகை அறிக்கை - 2021

மாவட்ட செயலகம் - ஹம்பாந்தோட்டை

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

மாவட்ட செயலகம் - ஹம்பாந்தோட்டை

செலவினத் தலைப்பு இலக்கம் 263

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு 1 - 33

அத்தியாயம் 02 – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 34

அத்தியாயம் 03 – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 35 - 82

- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

அத்தியாயம் 04 – செயலாற்றுகை சுட்டிகள் 83

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 84

அத்தியாயம் 06 – மனித வள விபரம் 85

அத்தியாயம் 07 - இணக்க அறிக் 86 -91

01 அத்தியாயம்

1.1 அறிமுகம்.

ஹம்பாந்தோட்டை மாவட்டம்

ஹம்பாந்தோட்டை எனும் பெயர் உருவான விதம் தொடர்பாக இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. **"ஹம்பன்"** எனும் கப்பல் வகை வருகை தந்த இறங்குதுறை ஹம்பாந்தோட்டை என மாற்றமடைந்ததென்பது ஆதில் மிகவும் பிரசித்தி பெற்ற கருத்தாகக் காணப்படுகிறது. பேராசிரியர் செனரத் பரணவிதாரன அவர்களின் கூற்றின் பிரகாரம் மலே கப்பல் ஒன்று இங்கு வருகை தந்தமையால் ஹம்பாந்தோட்டை எனும் யெர் இச் சடுத்திர இறங்கு துறைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய பிரதேசம் இலங்கை வரலாற்றில் மிக உன்னதமான ஒரு கலாசாரத்திற்கும் நாகரிகத்திற்கும் அடிப்படையாய் அமைந்த ஒரு நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த றுகுனு இராச்சியத்திற்கு உட்பட்ட ஒரு பகுதி ஆகும். ஆரிய குடியிருப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னர் இப் பிரதேசம் தொடர்பாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தகவல்கள் அவ்வளளவாக காணப்படாத போதும் இயக்கர், நாகர் எனும் பெயர்களால் அழைக்கப்பட்ட அவிருத்தி எனக் கருதப்படக் கூடிய இரண்டு கோத்திரங்கள் இங்கு வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன.

சுதந்திர தேசமாக எமது பாரம்பரிய ஒழுக்காறுகள் மற்றும் தூய பௌத்த கலாசாரத்தைக் கட்டியெழுப்பப்படுவதற்காக இப் பிரதேசம் அளப்பரிய பங்காற்றி உள்ளது.

அனுராதபுரம் மற்றும் பொலனறுவை இராசதானி தென் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு உட்பட்ட வேளைகளில் சிங்கள மரபுரிமைகளைப் பாதுகாப்பதில் றுகுனையைச் சேர்ந்த வீரர்கள் முன்னோடிகளாக செயற்பட்டார்கள். துட்டகைமுனு, தாதுசேனன், விஜயபாகு போன்ற அரசர்களுக்கு நாட்டை ஒன்றிணைப்பதற்கு றுகுனுரட்டவில் வாழ்ந்த மக்கள் உருதுணையாக நின்று செயற்பட்டார்கள். பௌத்த தர்மம் அழிவின் எல்லைக்கு சென்ற போதெல்லாம் அவை றுகுனுரட்டையின் பௌத்த விகாரைகளினாலேயே பாதுகாக்கப்பட்டன. அனுராதபுர இராஜதானி மக்கள் பட்டினியால் வாடிய வேளையிலும் தேசிய சுதந்திரத்திற்காக நாட்டு மக்கள் போராடிய வேளையிலும் அவர்களுக்கு றுகுனுரட்டவின் வயல்நிலங்களில் இருந்து உணவளிக்கப்பட்டன. அவ் உன்னத நகரத்தின் ஒரு பகுதி என்ற ரீதியில் ஹம்பாந்தோட்டை முக்கியம் பெறுகிறது. குடியேற்றவாத கால ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்ட யுகத்திலும் மலைநாட்டு அரசு உப்பினை ஹம்பாந்தோட்டையிலிருந்தே பெற்றுக்கொண்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரித்தானியர் யுகத்தில் ஹம்பாந்தோட்டை, துறைமாகவும் நகர மத்திய நிலையமாகவும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதன் பிரகாரம் பிரித்தானியர்கள் ஹம்பாந்தோட்டை நகரத்தில் கச்சேரி, அரச திணைக்கள அலுவலகங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றை அமைத்து அதனை மாவட்டத்தின் பிரதான நிர்வாக நகரமாக மாற்றினார்கள்.

பிரித்தானிய யுகத்தில் 72 கிராமத் தலைவர் பிரிவுகளை உள்ளடக்கிய மேற்கு கிருவாபத்துவ, 36 பிரிவுகளை உள்ளடக்கிய கிழக்கு கிருவாபத்துவ மற்றும் 28 பிரிவுகளை உள்ளடக்கிய மாகம்பத்துவ என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் நிலப் பகுதிகளில் மாகம்பத்துவ மிகப் பெரிய நிலப் பிரதேசத்தைக் கொண்டு காணப்பட்டது.

இலங்கையின் தென் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டை மாவட்டம் 2609 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பைக் கொண்டுள்ளது. இது நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 1/25 ஆகும். மாவட்டத்தின் ஆகக் கூடிய நீளம் 106 கி.மீ என்பதுடன் ஆகக் கூடிய அகலம் 39 கி.மீ.ஆகும். மாவட்டத்திற்குரிய கரையோரத்தின் நீளம் 151 கி.மீ ஆகும்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் சுமார் 11.5 ச.கி.மீ உள்ளக நீர் நிலைகளினால் மூடப்பட்டுள்ளது. அகல மற்றும் நெடுங்கோடு அமைவிடத்தின் பிரகாரம் வடக்கு அகலாங்கு 6.0 முதல் 6.5 வரையும் கிழக்கு நெட்டாங்கு 80.6 முதல் 81.7 வரையும் விரிந்து காணப்படுகிறது. வடக்கே மொனராகலை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை மாவட்டகளும் மேற்கே மாத்தறை மாவட்டமும் தெற்கு மற்றும் கிழக்கே இந்து சமுத்திரமும் இம் மாவட்டத்தின் எல்லைகளாக உள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள இயற்கையின் விசேட அருட்கொடைகளான தங்காலை பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள ஹும்மானய மற்றும் சூரியவெவ பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள வெண்ணீரூற்று மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள உசன்கொடைப் பிரதேசம் இந்த நாட்டில் காணப்படும் அரிதான புவியியல் பண்புகளாக உள்ளன. அம்பலாந்தோட்டைக்கு மேலாக அமைந்துள்ள மந்துனாகலை எனும் பிரபல்யமான ஆரணியத்திற்கு அருகில் இந்த வெந்நீர் ஊற்று அமையப் பெற்றுள்ளது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நீர் நிலைகளின் வடிவமைப்பு 19 பிரதான நதிகள் மற்றும் இயற்கை நீர் நிலைகள் அமைந்துள்ளன. அவை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

நுதி	நீளம் (மைல்கள்)
சீனிமோதர ஓயா	5
கிரம ஓயா	20
ரெகவ ஓயா	4
ஊருபொகுவ ஓயா	26
கச்சிகல்ஆர ஓயா	13
வளவே கங்கை	85
கரகன் ஓயா	45
மலல ஆர	34
எமிலிகல் ஓயா	85
கிரிந்தி ஓயா	73
தம்பாவே ஆர	35
மகசீலாவே ஓயா	8
பூதவ ஓயா	8
மெனிக் ஓயா	71
கடுபள ஆர	11
கரெந்த ஆர	16
நமடகஸ் ஆர	4
கரவே ஆர	3
கும்புக்கன் ஓயா	72

இவற்றுள் வளவே கங்கை, கிரிந்தி ஓயா, மானிக்க கங்கை, ஊருபொக்கை ஓயா மற்றும் கச்சிகல் ஆர போன்றே மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் அமையப் பெற்ற கும்புக்கன் ஓயா பிரதான நீர் மார்க்கமாகும். பெரும்போகம் எனும் வடகீழ் பருவப்பெயர்ச்சி காலத்தில் (நவம்பர் -மார்ச்) இந்த நதிகளின் நீர்மட்டம் உயர்வடைவதுடன் பெரும்போகம் எனப்படும் தென்மேல் பருவப் பெயர்ச்சி காலத்தில் (மே - செப்டம்பர்) நீர் மட்டம் குறைவடையும்.

மாவட்டத்திலே காணப்படும் 13 பிரதான குளங்கள் மற்றும் உள்ளக நீர்த்தேக்கங்களில் மிகப்பெரிய குளமாக ரிதியகம குளம் காணப்பட்டாலும் ஆகக் கூடியளவு நீர் கொள்ளளவு முருத்தவெல மற்றும் லுனுகம்வெஹெர நீரத்தேங்களில் உள்ளடங்கி உள்ளது. கூடுதலான குளங்கள் திஸ்ஸமகாராம பிரதேசத்தில் அமைந்துள்ளன. மாவட்டத்தில் பிரதானமாக சில நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. உடவளவ அபிவிருத்தி திட்டம், கிரம ஓயா திட்டம், ஊருபொக்க ஓயா திட்டம், லியன்கஸ்தொட்ட திட்டம், ரிதியகம திட்டம், லுனுகம்வெஹெர திட்டம், மவ்ஆர திட்டம் மற்றும் கெகிரிஓபட திட்டம் ஆகியன இதில் உள்ளடங்கும். மாவட்டத்தில் உள்ள விவசாய குடியேற்றத் திட்டங்களாக மஹகல்வெவ, பந்தகிரிய, பெரகம மற்றும் முறுத்துவெல திட்டம் ஆகியவற்றைக் காட்ட முடியும்.

மேற்கே குடாவெல்ல முதல் கிழக்கு பட்டணங்கல வரை விரிந்துள்ள ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய கரையோரம் எழில் மிகுந்த கரையோரப் பண்புகள் பலவற்றை உள்ளடக்கி உள்ளன. அவற்றுள் முனைகள், களப்புகள், குடாக்கள், மணல்மேடுகள், திட்டுக்கள், கழிமுகங்கள் ஆகியன முக்கியம் பெறுகின்றன. அதற்கு மேலதிகமாக மீன்பிக் கைத்தொழில் தொடர்பில் முக்கியம் பெறும் துறைமுகங்கள், இறங்குதுறைகள் மற்றும் களப்புகள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. குடாவெல்ல, தங்காலை, ஹம்பாந்தோட்டை மற்றும் கிரிந்த துறைமுகங்கள் நவீன வசதிகள் கொண்ட மீன்பிடி துறைமுகங்களாக தற்போது அபிவிருத்தி கண்டுள்ளன. அதற்கு மேலதிகமாக மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் களப்புகள் பலவும் அமைந்துள்ளன. தேசிய உப்பு உற்பத்திக்கு கூடுதல் பங்களிப்புச் செய்யும் உப்பளங்கள் சிலவும் இக் கரையோப் பிரதேசத்தில் காணப்படுகிறது. ஹம்பாந்தோட்டை மஹலேவாய, கொஹொலங்கல மற்றும் மற்றும் பலட்டுபான ஆகிய உப்பளங்கள் இவற்றுள் பிரதான உப்பங்களாக காணப்படுகின்றன.

வெப்ப மற்றும் அரை வெப்ப காலநிலைப் பண்புகளைக் கொண்ட இந்த மாவட்டத்தில் சூழல் மற்றும் காலநிலை வேறுபாடுகளை எடுத்துக் காட்டும் ஈரவலயப் பண்புகளும் ஓரளவு காணப்படுகின்றன. மாவட்டத்தின் மேற்கு எல்லையின் மலையின் ஊடாக பாய்ந்தோடும் சிறிய நீர் வீழ்ச்சிகள் சில காணப்படுகின்றன. 40 அடி உயரமான பிசோகல எப்படும் சப்புகஹ தொல நீர் வீழ்ச்சி இதில் மிகப் பிரதானமான நீர் வீழ்ச்சி ஆகும். பிரதேசத்திலே சாதாரண வெப்பநிலை 31 செல்சியஸ் ஆகும். வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1049.6 மி.மீ ஆகும்.

நிர்வாக ரீதியாக ஹம்பாந்தோட்டை மாவட்டமானது 12 பிரதேச செயலாளர் பிரிவுகளாகவும் 576 கிராம அலுவலர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 01 மாநகர சபையும் 01 நகரசபையும் 10 பிரதேச சபைகளும் 04 தேர்தல் தொகுதிகளும் உள்ளடங்கும்.

ஏனைய பிரிவுகளாக 13 பொலிஸ் அதிகார பிரதேசங்களும் 03 கல்வி வலயங்களும் 16 கமநல சேவை நிலையங்களும் 10 சுகாதார வைத்திய பிரிவுகளும் காணப்படுகின்றன.


ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த சனத்தொகை 667,615 என்பதுடன் அது 328,003 ஆண்களையும் 339,612 பெண்களையும் உள்ளடக்கி உள்ளது. அதன் பிரகாரம் சன்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 256 ஆகும். இனரீதியாக 97.1% சிங்களவர்களும் 0.6 % தமிழர்களும், 0.1% இலங்கை சோனகர்களும் உள்ளடங்கும். சமய ரீதியாக 97.1 % பௌத்தர்களும் 0.5 % இந்துக்களும் 2.4% இஸ்லாமியர்களும் வாழ்கின்றார்கள். மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை செய்ப்படும் மொத்த நிலப் பரப்பு 88,480 ஹெக்டெயர்கள் ஆகும். நெல் பயிரிடப்படும் நிலப்பரப்பில் 83.3% பாரிய நீர்ப்பாசனத்தின் மூலம் போசிக்கப்படுகிறது. கால்நடை வளர்ப்பின் கீழ் இங்கு தயிர் மற்றும் பசுப்பால் உற்பத்தி பாரியளவில் மேற்கொள்ளப்படுகிறது.

மிக அண்மைக்காலமாக துரித அபிவிருத்தி நோக்கிப் பயணிக்கும் இம் மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி நம்பமுடியாத அளவு அதிகரிக்கும். தற்போது அமுல்படுத்தப்படும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம், சர்வதேச விமான நிலையம், நிர்வாக கட்டடத்தொகுதி, சர்வதேச மாநாட்டு மண்டபம், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், புதிய புகையிரத பாதை, அதிவேகப் பாதை முறைமை, சர்வதேச கிரிக்கட் விளையாட்டு மைதானம் மற்றும் சுற்றுலா செயற்றிட்டம் ஆகியன மூலம் கிடைக்கப்பெறும் உந்துசக்தியின் காரணமாக மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி விரைவுபடுத்தப்படும்.

மாவட்டத்தின் அடிப்படை புள்ளிவிபரத் தகவல்கள

விடயம்	விபரம்
மாவட்டம்	ஹம்பாந்தோட்டை
மாகாணம்	தென்மாகாணம்
மொத்த நிலப்பரப்பு	ச.கி .மீ 2609
பிரதேச செயலக பிரிவுகளின் எண்ணிக்கை	12
கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை	576
கிராமங்களின் எண்ணிக்கை	1338
தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை	4
மாநகர சபைகளின் எண்ணிக்கை	1
நகர சபைகளின் எண்ணிக்கை	1
பிரதேச சபைகளின் எண்ணிக்கை	10
அமைச்சு மற்றும் மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள சுற்றுலா விடுதிகள் உத்தியோகபூர்வ விடுதிகளின் எண்ணிக்கை	சுற்றுலா விடுதி - 01மாவட்ட செயலகத்தின் கீலுள்ள உத்தியோகபூர்வ விடுதிகளின் எண்ணிக்கை - 33
வலயக்கல்வி அலுவலக எண்ணிக்கை	3
பாடசாலைஇ ஆசிரியர் எண்ணிக்கை	பாடசாலை எண்ணிக்கை - 320 ஆசிரியர் எண்ணிக்கை - 8526
சனத்தொகை	ஆண் - 328,003 பெண் - 339,612 மொத்தம் -667,615

மாவட்ட வரைபடம்


THE MAP OF HAMBANTOTA DISTRICT
INDIAN OCEAN
Tissamaharama
Lunugamvehera
Hambantota
Sooriyawewa
Ambalantota
Angunakolapelessa
Tangalle
Weerawila
Kataluwa
Walasmulla
Okewela
Beliatta

1.2 ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலக தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கம்

தொலைநோக்கு

"செயற்திறனுடைய மாவட்ட நிர்வாகம் மூலம் மிகச்சிறந்த மக்கள் சேவை"

பணிக்கூற்று

"மக்களது தேவைகளை செயற்திறனுடனும் நியாயமானதாகவும் நீதியாகவும் நட்புறவுடனும் நிறைவேற்றுவதனூடாக அரச கொள்கைகளுக்கு அமைவாக சிறந்த வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புடன் மாவட்டத்தில் பேண்தகு அபிவிருத்தியை உறுதி செய்தல்."

நோக்கம்

- செயற்திறன் மற்றும் உற்பத்தி திறனுடைய மாவட்ட நிர்வாகத்தை பேணிச் செல்லல்.
- மக்களது திருப்தியை அதிகரிக்கும் விதமாக அரச துறையினால் செயற்தினுடைய சேவை வழங்கப்படுவதை உறுதி செய்தல்
- சிறந்த மனப்பாங்கு, பொறுப்பு, புத்திசாதுர்ய வளப் பாவனை, பக்கச்சார்பின்மை, தெட்டத்தெளிவு போன்ற முறைமைகளை அரச சேவையில் உருவாக்குதல்.
- அரச துறையின் மனித வள முகாமை தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- அரச அலுவலர்களின் ஓய்வூதிய சம்பளம் தொடர்பான கொள்கைகளுக்கு அமைய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மாவட்டத்தில் செயற்படும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தானங்கள், சபைகள் மற்றும் அதிகார சபைகளினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், நிதி ரீதியான மற்றும் நிதியல்லாத வளங்களை ஈடுபடுத்தல் மற்றும் பின்னாய்வுப் பணிகளின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு மாவட்ட மக்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தியினை அதிகரித்தல்.
- மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பல்வேறு பொருளாதார சமூக மற்றும் கலாசார தேவைகளை மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்கள் ஊடாக நிறைவேற்றுதல்.
- மாவட்டத்தின் அரச பிரதிநிதியாக செயற்பட்டு பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சரியானதும் குறித்தொதுக்கப்பட்டதுமான தகவல்களை கிராமிய மற்றும் பரிதேச மட்டத்தில் சேகரித்து ஒருங்கிணைத்து வழங்குதல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலமாக அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள் சார்பாக மாவட்டத்தில் அவர்களுக்குரிய வருமானத்தை சேகரித்தல், கணக்குகளில் பதிவு செய்தல் மற்றும் திறைசேரியில் வைப்புச் செய்தல்.
- வெள்ளம், சூராவளி, வரட்சி, கடல் கொந்தளிப்பு போன்ற அவசர அனர்த்த நிலைமைகளின் போது மக்களுக்குத் தேவையான துரித நிவாரண சேவைகள் மற்றும் உதவிகளை வழங்குதல், அவர்களது வாழ்க்கைத் தரத்தை வழமைக்கு கொண்டு வரல்.
- குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், கல்வி அபிவிருத்தி மற்றும் அறிவு, ஆற்றல்களை விருத்தி செய்தல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

01. சிவில் நிர்வாகப் பணிகள்

02. வருமானச் சேகரிப்பு

03. பிரதேச செயலகங்களின் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் நிர்வகித்தல்

04. மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

05. மாவட்டத்தில் வறுமையைக் குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

06. தேர்தல்களை வழிநடாத்தல்

07. மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ பணிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

08. சுடுகலன்கள் மற்றும் வெடிப் பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

09. சந்தை ஆய்வு, சந்தை சுற்றிவலைப்பு மற்றும் நுகர்வோரை வலுவடையச் செய்வதன் மூலம் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல்.


10. மாவட்டத்தில் வியாபாரம், வர்த்தகம், உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறைகளில் அளவையியல் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளை வழங்குதல்.

11. கலாசார அலுவல்கள், பௌத்த அலுவல்கள் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி பணிகளை வழிநடாத்தல்.

12. சமூக சேவை மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

13. தேசிய விழாக்களை ஏற்பாடு செய்தல்

1.4. நிறுவாகக் கட்டமைப்பு



அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரம்
2021.12.31 திகதிக்கு

வகை	முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை படி அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரம்	தற்போது உள்ள ஆளணி	வெற்றிட எண்ணிக்கை	அதிகப்படியான
மாவட்ட செயலாளர்	1	1	-	-
மேலதிக மாவட்ட செயலாளர்	2	2	-	-
பிரதம கணக்காளர்	1	1	-	-
பிரதான உள்ளக கணக்காய்வாளர்	1	1	-	-
உதவி மாவட்ட செயலாளர்	1	1	-	-
கணக்காளர்	1	1	-	-
இலங்கை பொறியியல் சேவை	2	2	-	-
உப மொத்தம்	**9**	**9**	**-**	**-**
மூன்றாம் நிலை மட்டம்				-
நிர்வாக அலுவலர்	1	1	0	-
மொழிபெயர்ப்பாளர்	2	0	2	-
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர்	1	0	1	-
உப மொத்தம்	**4**	**1**	**3**	**-**
இரண்டாம் நிலை மட்டம்				-
அபிவிருத்தி இணைப்பாளர்	1	0	1	-
வரவு செலவு உதவியாளர்	1	0	1	-
அபிவிருத்தி அலுவலர்	29	40	-	11
தொழிநுட்ப உத்தியோகத்தர்	2	1	1	-
படவரைஞர் (Draftsman)	1	1	-	-
அரச முகாமைத்துவ உதவியாளர்	29	27	2	-
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்	2	2	-	-
தொழிநுட்ப உதவியாளர்	2	1	1	-
உப மொத்தம்	**67**	**72**	**6**	11
ஆரம்ப நிலை மட்டம்				
சாரதி	8	8	-	-
மின் தொழிநுட்ப வியலாளர் (திணைக்களம்)	1	0	1	-
சுற்றுலா விடுதி பொறுப்பாளர் / சமையலாளர்	1	0	1	-
அலுவலக உதவியாளர்	13	13	0	-
மின் தொழிநுட்ப வியலாளர் (`மாற்று பயிற்சி)	0	2	-	2
உப மொத்தம்	**23**	**23**	**2**	2
மொத்தம்	**103**	**105**	**11**	**13**

1.5 மாவட்ட செயலகத்தின் பிரதான பிரிவுகளும் 12 பிரதேச செயலகங்களும்

1. தாபனப் பிரிவு

தொலைநோக்கு: செயலினை ஆற்றி நோக்கத்தை பூர்த்தி செய்வோம்

பணிக்கூற்று : மாவட்டத்தில் பேண்தகு அபிவிருத்திக்கான அலுவலக நடவடிக்கைகள் மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளின் முறையான ஒருங்கிணைப்பு மூலம் சிறந்த பொதுமக்கள் சேவைக்காக அர்ப்பணித்தல்.

நோக்கமும்: மாவட்ட செயலக மற்றும் மாவட்டத்தின் பிரதேச செயலகங்களின் சகல அலுவலகர்களினதும் தாபன நடவடிக்கைகள், அரச அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், சுடுகலன் அனுமதிப் பத்திரம் மற்றும் வெடிப்பொருட்களின் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கான தீர்வு வழங்குதல்.

நிறைவேற்றப்படும் பணிகள்

- மாவட்ட செயலக சகல அலுவலகர்களதும் மாவட்ட செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் சகல அலுவலர்களதும் தாபன நடவடிக்கைகள்.
- பிரதேச செயலாளர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பேணுதல் மற்றும் ஏனைய அலுவலர்களது தாபன நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- மாவட்டத்தின் சகல கிராம அலுவலர்களதும் தாபன நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- பிரதேச செயலகங்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
- அனுமதிப்பத்திரம் தொடர்பான நடவடிக்கை எடுத்தல் (சுடுகலன்கள் மற்றும் வெடிப்பொருட்கள் அனுமதிப்பத்திரம்).
- வாகனம் தொடர்பான சகல பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகள்.
- தேர்தல்கள் தொடர்பான ஒருங்கிணைப்ப பணிகள்.
- பல்வேறு சமூக நலன்புரி சேவை நடவடிக்கைகள்.
- அரச விழாக்களை ஏற்பாடு செய்தல்.
- அரச அலுவலர்களின் வதிவிடத்திற்காக அரச பொது விடுதிகளை வழங்குதல், வீடுகள் பராமரிப்பு, வீட்டுக் கூலி அறவீடு செய்தல்.
- கலாசார அலுவல்கள், பௌத்த அலுவல்கள் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி பணிகளை வழிநடாத்தல்.
- மனித வள அபிவிருத்தி மற்றும் உற்பத்தி திறன் தொடர்பில் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
- மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ பணிகளை வழிநடாத்தல்.

- காட்டு யானைகள் மற்றும் இழப்பீடு வழங்குதல் தொடர்பான அனைத்து கடமைகள்.
- அபிங் குழுக்கள் தொடர்பான கடமைகள்.
- துகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பான கடமைகள்.
- சுற்றுலா விடுதிகளை ஒதுக்குதல், பராமரித்தல், பேணுதல் தொடர்பான கடமைகள்.
- பிரதேச செயலங்களின் காணிப் பிரச்சினைகள், பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான கடமைகள்.
- புலா மரம் உள்ளிட்ட மரங்கள் தொடர்பான கடமைகள்.
- சனாதிபதி அலுவத்தில் இருந்து கிடைக்கப் பெறும் கடிதங்கள் தொடர்பான கடமைகள்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களை சுத்தம் செய்யும் பணிகள்.

2. பொறியியல் பிரிவு

தொலைநோக்கு:

செயற்திறன் வாய்ந்த மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முதன்மைவாய்ந்த மக்கள் சேவை

பணி: மக்களின் தேவைளை செயற்திறனுடனும் நியாயமாகவும் நேர்மையுடனும் நட்புறவுடனும் மேற்கொண்டு அரசகொள்கைக்கு அமைவாக முறையான வளமுகாமைத்துவம், ஒருங்கிணைப்பு என்பன மூலம் மாவட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிசெய்தல்

நோக்கமும் குறிக்கோள்களும்:

மாவட்டத்தின் நிர்மாணிப்புத் தேவைகளை பூர்த்திசெய்து மக்களின் தேவைகளை நிறைவுசெய்தல்

3. சமூகசேவைப் பிரிவு

தொலை நோக்கு.

2030 ஆம் ஆண்டளவில் வேறுபாட்டிற்கும் அநீதிக்கும் ஆளாகியுள்ள மக்களது உரிமைகள் மற்றும் சமத்துவம் மிக்க பாதுகாப்பானதோர் இலங்கையை உருவாக்குவதில் முன்னோடியாகச் செயற்படல்.

புணி : இலக்கு சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பிற்கான நிறுவனங்களுக்கிடையிலான கூட்டிணைப்பு மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்தின் தலையீட்டின் ஊடாக புத்தாக்க பிரவேசத்தினூடாக விரைவாகவும், செயற்திறனுடனும் மற்றும் உற்பத்தி திறனுடனும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கொள்கை வகுத்தல் மற்றும் நகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைதல்.

பிரதான செயற்பாடுகள்

ஊனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி வழங்குதல், சுயதொழிலுக்கான தொழில்சார் கருவிகளை வழங்குதல் மற்றும் திறந்த தொழில்வாய்ப்புக்களுக்கு ஆவன செய்தல்.

- ஊனமுற்றவர்களுக்கான தொழிற் சந்தையை இனங்காணலும் விரிவுபடுத்தலும்.
- ஊனமுற்றவர்களின் நடைமுறைத் தேவைகள் மற்றும் போக்குகளை இனங்காண்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- ஊனமுற்றவர்களுக்கான துணைக் கருவிகளை வழங்குதல், ஊனமுற்றவர்களின் குடும்பங்களை வலுவூட்டல்.
- விசேட தேவைகளையுடைய சிறுவர்கள் தொடர்பில் காலதாமதமின்றி தலையீட்டை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் ஒருங்கிணைந்த கல்விக்கு ஆவன செய்தல்.
- சேவை வழங்கும் உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- செவிப்புலக் குறைபாடுடையவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் மற்றும் சமிக்ஞை பெயர்ப்பு சேவையினை வழங்குவதன் மூலம் செவிப்புலக் குறைபாடுடையவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்தல்.
- பாதுகாவலர்களை இழந்த மன வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குதல்.
- ஊனமுற்றவர்களின் நலனோம்புகைக்காக நடாத்தப்பட்டு வரும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- கண்பார்வையற்ற சிறுவர்களுக்கு விளையாட்டு, கல்வி மற்றும் கலாசார ரீதியான உதவிகளை வழங்குதல்.
- போதைக்கு அடிமையானவர்களுக்கு வதிவிடப் புனர்வாழ்வளித்தல்.
- பிரசைகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊனமுற்றவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல்.
- பிரதேச ரீதியாக ஊனமுற்றவர்களின் சுயசக்தி அமைப்புக்களை தாபித்தல், வலுவூட்டல் மற்றும் செயலூக்கத்துடன் பேணிச் செல்லல்.

ஒன்றிணைந்த பிரவேசத்தினூடாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

4. மாவட்ட திட்டமிடல் செயலகம்

தெலைநோக்கு:

"பேண்தகு அபிவிருத்தியின் முன்மாதிரி மாவட்டமாக மாற்றமடைதல்."

பணி:

"மாவட்ட மக்கள் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் அரச கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்திறனுடனும் பயனுள்ளவாறும் அமுல்படுத்த இயலுமான விதத்தில் திட்டங்களை வகுத்தல், வழிநடாத்துதல், மதிப்பிடுதல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை செயற்தினுடன் நிறைவேற்றுவதன் மூலம் பேண்துக அபிவிருத்திக்கு உச்ச பங்களிப்பை வழங்குதல்".

பிரதான செயற்பாடுகள்

- மாவட்ட இணைப்பாக்க குழு மற்றும் ஏனைய அபிவிருத்தி பணிகளுக்கான பிரதான கூட்டங்களை ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் வழிநடாத்தல்.
- மாவட்டத்தின் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் வழிநடாத்தலும் மேற்பார்வை செய்தலும்.
- ஏனைய நிரல் அமைச்சு நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மாவட்டத்தில் ஒருங்கிணைத்தலும் வழிநடாத்தலும்.
- மாவட்டத்தினுள் அமுல்ப்படுத்தப்படும் விசேட அபிவிருத்தி செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு மாவட்டத்தில் பணி புரியும் அலுவலர்களின் நிர்வாக தாபன நடவடிக்கைகள்.
- மாவட்டத்தினுள் அரச முதலீட்டு திட்டத்தை தயாரித்தல்.
- மாவட்டத்தின் வளப் பயன்பாட்டின் போது முக்கியம் பெறும் "வள விபரத்தை" தயாரித்தல்

5. சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம

தொலைநோக்கு:

2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற வலுவூட்டப்பட்ட சுபீட்சம் நிறைந்த இலங்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் முன்னோடி நிறுவனமாக மாறுதல்

பணி : வேறுபடுத்தப்பட்ட மக்களை வலுவூட்டுதல் (பொருளாதார, சமூக, மனோரீதியான, தீர்மானம் எடுத்தல், சட்ட ரீதியான மற்றும் சுற்றாடல் ரீதியில்) மற்றும் பிரதேச வேறுபாடுகளைக் குறைப்பதற்காக செயற்திறனுள்ள, பயனுள்ள, வேகமான மற்றும் பயனுள்ள தீர்வுகளை மக்கள் நேயத்துடன் நடைமுறைப்படுத்துவதற்காக திணைக்களங்கள், பிரசைகளை அடிப்படையாகக் கொண்ட இயக்கங்கள் மற்றும் நுண்கடன் நிறுவன வலைப்பின்னல்கள், தொழில்சார் நிபுணர்கள், அரசு, தனிப்பட்ட மக்கள் மற்றும் அரசியல் துறைகளின் உரிய பங்களிப்பு மற்றும் உள்நாட்டு மற்றும் உலக நிறுவனங்களின் பங்களிப்புடன் வறுமையற்ற சுபீட்சமான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதனூடாக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும் :

வறுமையைக் குறைத்தல்

6. மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவு

தொலைநோக்கு:

சிறந்த மோட்டார் வாகன ஒழுங்குபடுத்தலின் உயர்வான மக்கள் வரவேற்பு

பணி: ஊக்கப்படுத்தப்பட்ட ஆளணியினரின் முயற்சி மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்கு விதிகளை மிகச்சிறந்த விதமாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக உயர்வான மக்கள் வரவேற்பினைப் பெறுவதற்காக அர்ப்பணித்தல்.

7. புலனாய்வுப் பிரிவு

தொலைநோக்கு:

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஊழல் மற்றும் முறைகேடுகளை ஒழிப்பதற்காக செயற்படும் பிரதானமான செயற்திறன் மிக்க மற்றும் பயனுள்ள பிரிவாக மாறுதல்.

பணி: ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்குக் கீழ் உள்ள அரச நிறுவனங்களில் நல்லாட்சிக்குத் தேவையான குவியல்புகளைக் கொண்ட ஒரு நிநவாகக் கட்டமைப்பினை பேணிச் செல்வதை உறுதிசெய்வதற்கு ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளலும் வழிநடாத்தலும்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:-

மக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் மற்றும் குறைகள் தொடர்பில் செயற்படுவதாகவும் அதற்கு நியாயமான முறையில் செயற்படுவதாகவும் அதற்கு நியாயமான முறையில் பதில் தெரிவிப்பதாகவும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

மேற்கொள்ளப்படும் பணிகள்:-

- மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட செயலாளருக்குக் கீழ் உள்ள பிரதேச செயலகங்களின் அலுவலக நடவடிக்கைகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை நடாத்துதல், புலனாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் குற்றச்சாட்டுக்கான வரைவுகளை மேற்கொள்ளல்.
- முறைசார் ஒழுக்காற்று நடடவடிக்கைகளின் போது சாட்சியமளித்தமல் மற்றும் முறைப்பாட்டினை வழிநடாத்துதல்.
- மாவட்ட செயலாளரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்

8. தொகைமதிப்பு புள்ளிவிபரக் கிளை

தொலைநோக்கு:

தேசத்தின் அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ள செய்ய நிலையான தகவல்களை தருவோரிடையே வலயத்தின் முன்னோடியாக மாறுதல்.

புணி: பூகோளமயப் பின்னணியில் சுபீட்சமான ஒரு தேசமாக மாறுவதற்காக நவீன தொழிநுட்பம், ஊழியர் அர்ப்பணிப்பு மற்றும் தந்திரோபாய தலைமைத்துவம் மூலம் மிகவும் பயனுள்ளவாறு காலத்திற்குப் பொருத்தமானதும் சரியானதுமான தரவுகளை வழங்குவதன் மூலம் தேசத்தின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு பங்காற்றுதல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

அபிவிருத்தி திட்டமிடல்களை தயாரிக்கும் போது போதியளவான தரவுகள் மற்றும் தரவுகள் இன்மையால் சிக்கலாக உள்ள இவ்வாறான சந்தர்ப்பத்தில் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக திட்டமிடல்களைத் தயாரிப்பதற்கு புள்ளிவிபரத் தகவல்களை இற்றைப்படுத்தி பேணிச்செல்லல் புள்ளிவிபரப் பிரிவின் பிரதான நோக்கம் ஆகும்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் புள்ளிவிபரப் பிரிவினால் சனத்தொகை, விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை, கல்வி, சுகாதாரம், ஊழியப்படை, அரசியல் மற்றும் வரலாற்று ரீதியான தகவல்களை உள்ளடங்கிய பல்வேறு துறைகள் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

9. அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் அலுவலகம்

தொலைநோக்கு:

முறையாக பாதுகாக்கப்பட்ட நுகர்வோர் சமூகமொன்றின் பொருட்டு சரியானதும் நியாயமானதும் நம்பிக்கையானதுமான அளவீட்டு முறைமை ஒன்றைப் பேணுதல்.

பணிக்கூற்று:

தேசிய அளவீட்டு முறைமையின் பொறுப்பை ஏற்று அளவீட்டு முறையை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் மற்றும் பரிமாற்றச் செயற்பாட்டின் போது நீதி நியாயத்தை நிறைவேற்றும் முன்னனி அளவீட்டு விஞ்ஞான நிறுவனமாக மாறுதல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

இலங்கையின் முன்னி அளவீட்டு விஞ்ஞான நிறுவனமாக செயற்படல் மற்றும் 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அடிப்படை அளவீட்டு விஞ்ஞானம், கைத்தொழில் அளவீட்டு விஞ்ஞானம் மற்றும் சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட பணிகளை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமுல்படுத்தல்.
- மாவட்ட ஆய்வுகூடத்தைப் பேணுதல்.
- கைத்தொழில் துறைகளில் பயன்படுத்தப்படும் அளவீட்டு இலக்கங்களை திருத்துதல்.
- வியாபார மற்றும் வர்த்தக துறைகளில் பயன்படுத்தப்படும் நிறுவை, அளவை உபகரணங்கள் மற்றும் படிகளை சரிபார்த்தல்.
- சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பான நுகர்வோர் கல்வி

10. நுகர்வாளர் அலுவல்கள் அதிகார சபை

தொலைநோக்கு :

சிறந்த வர்த்தக வியாபர ஒழுங்குகளை மதிக்கும் வர்த்தக சமூகமொன்றில் பாதுகாப்பான நுகர்வோரை உருவாக்குதல்.

பணிக்கூற்று :

வர்த்தக சமூகத்தினுள் சிறந்த போட்டித் தன்மையை மேம்படுத்தி நுகர்வாளனை வலுவூட்டுவதன் மூலம் நுகர்வாளளை பாதுகாத்தல்

நோக்கங்கள் / குறிக்கோள்கள்

- நுகர்வாளனின் உயிருக்கும் உடமைக்கும் தீங்கு ஏற்படுத்தும் பொருட்கள் விற்பனை செய்தல் மற்றும் சேவை வழங்குவதற்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்.
- நியாயமற்ற வியாபர முறைகள் மூலம் நுகர்வோரைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்தல்.
- இயலுமான எல்லா சந்தர்ப்பத்திலும் நுகர்வோருக்கு போட்டித் தன்மை வாய்ந்த விலையில் பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள போதிய பிரவேசத்தை வழங்குதல்..
- வியாபாரிகளினால் மேற்கொள்ளப்படும் நுகர்வோர் சுரண்டலுக்கு உட்படும் விதமான நடவடிக்கைகளுக்கு எதிராக நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குதல

நுகர்வாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிகள்

(அ) 1. முயற்சியாளர்களிடையே மட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்தம்

2. முயற்சியாளர்களிடையே விலை தொடர்பான வேலைத்திட்டம்

3. சந்தையின் உள்ளேயோ அல்லது சந்தையின் ஒரு பகுதியிலேயோ உள்நாட்டு வியாபாரம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஆதிபத்தியின் நிலையை முறைகேடாக பிரயோகித்தல்.

4. சுதேச அல்லது சர்வதேச வியாபாரத்திற்கு அல்லது பொருளாதார அபிவிருத்திக்கு தீங்காக அமையும் தடைகளை அகற்றுதல்.

(ஆ) போட்டி எதிர்ப்புடை நடத்தை மற்றும் ஆதிபத்தியின் நிலையை முறைகேடாக ஈடுபடுத்தல்.

(இ) பொருட்கள் சேவை வழங்கும் நபர்களிடையே உற்பத்தி திறன் மிக்க போட்டி தன்மையை பேணி வருதலும் மேம்படுத்தலும்

(ஈ) பொருட்கள் சேவைகளது விலை அதனை பெற்றுக்கொள்ள இயலுதல் அதன் தரம் வழங்கும் விலை தொடர்பாக வாடிக்கையாளரின் கொள்வனவாளரின் அல்லது பொருட்கள் சேவைகளை பயன்படுத்தபடுவோரின் உரிமைகள் மற்றும் தொடர்புகளை மேம்படுத்தலும் பாதுகாத்தலும்

(உ) கொள்வனவு செய்ய வைத்திருக்கும் பொருளின் சேவையின் நிலை சக்தி சுத்தம் தரம் தொடர்பாக நுகர்வாளரை அறிவுறுத்தல்.

(ஊ) இச் சட்டத்தில் குறிப்பாக கூறப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பாக விசாரணைகள் பரசீலனை என்பவற்றை நடாத்தல்.

(எ) சந்தைப் போட்டித் தன்மை இழிவளவான உறிபத்தி திறனுடன் காணப்படும் சந்தர்ப்பத்திலே சந்தையில் போட்டி விலையை மேம்படுத்தல்

(ஏ) சந்தையில் நிலைவரம் மற்றும் நுகர்வாரள் நடவடிக்கைக்கு அமைவாக அறிக்கை வெளியிடல் அபாது மக்களிற்கு தகவல் வழங்குதல்.

(ஐ) அரச துறை மற்றும் தனியார் துறையின் வினைத்திறன் தொடர்பான அறிக்கையை பொருப்பேற்றல்.

(ஒ) நுகர்வாளரின் சிறந்த சுகாதாரம் பாதுகாப்பு தொடர்பில் நுகர்வாரள் அறிவை மேம்படுத்தல்.

(ஓ) சந்தை நிலை மற்றும் நுகர்வாரள் நடவடிக்கை தொடர்பாக தகவல்களை வேறு தாபனங்களுடன் பரிமாற்றம் செய்தலும் மேம்படுத்தலும்

(ஔ) நுகர்வாரள் அமைப்புக்களை ஆரம்பித்தல் மேம்படுத்தல் உதவி புரிதல ஊக்கப்படுத்தல.

(க) அதிகார சபையால் பெற்றுத்தரப்படும் ஏதேனும் சேவையொன்று தொடர்பாக கட்டண அறவீடு செய்தல்.

(ங) அதிகார சபையின் பணிகள் மாற்றும் போது வசதி வழங்குவதற்கு அவசியமான வகையில் ஏதேனும் விதத்தில் குழுவினை நியமித்தல.

(ச) அதிகார சபையின் நோக்கத்தை வெற்றிகொள்ள வினைத்திறனுடன் அதிகார சபையின் பணிகளை வினைத்திறனுடன் ஆற்றுவதற்காக சகல வித நடவடிக்கைகளையும் செய்தல்.

11. காணிப் பாவனைத் திட்டமிடல் பிரிவு

தொலைநோக்கு:

மாவட்டத்திலுள்ள பூமி வளத்தினை சிறப்பாகவும் பேண்தகு விதத்திலும் பயன்படுத்துதல்.

பணி: எமது தரப்பினரும் பூமியை உபயோகிப்பவர்களும் திருப்தியடையும் வண்ணம் செயற்திறனுடைய மற்றும் சேவைக்கு அர்ப்பணிக்கும் ஆளணியினர் மூலம் சுற்றாடல் சமநிலையைப் பேணி பேண்தகு மற்றும் சிறந்த முறையில் பூமியைப் பயன்படுத்துவதற்கு உதவுதல்.

நோக்கங்களும் இலக்குகளும்:

பொதுவாக ஒட்டு மொத்த சமூகத்திற்கும் நன்மைபயக்கும் விதமாக பூமி வளத்தை பாதுகாத்தல், பேணுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள்:

- மாவட்டத்தின் பிரதேச செயலகப்பிரிவில் கிராமிய மட்ட காணி பயன்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்.
- பல்வேறு பணிகளுக்கு அபிவிருத்தி செய்யப்படாத அல்லது பயன்படுத்தப்படாத அரச காணிகளை இனங் காணல்.
- காணிக்காக தகைமை வகைப்படுத்தல் மேற்கொண்டு கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தை தயாரித்தல்.
- தேசிய ரீதியில் காணி பயன்பாட்டு ஆய்வில் திருப்திகரமாக பங்குபற்றல்.
- மாவட்டதினுள் அமுலுக்கு கொண்டுவரும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அவசிய காணி இணங்காணப்பட்டு குழு நடாத்துதல்
- பிரதேச செயலக பிரிவுகளில் காணி பகிர்தளில் ஒதுக்கீடு செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக சிபார்சு சமர்ப்பித்து அதற்கான பிரதேச காணிப் பயன்பாட்டு குழு நடாத்துதல்.
- பிழையானக் காணிப்பயன்பாடு காரணமாக ஏற்படக்கூடிய தீங்கான விளைவுகளை குறைக்கும் நோக்கிலே பாடசாலை மாணவர் மக்கள் மற்றும் காணிப்பயன்பாட்டிற்குரிய அரச மற்றும் அரச சார்பற்ற தாபனங்களின் அலுவலர்களுக்கு அறிவுறுத்துவதற்காக பல்வேறு மாவட்டங்களில் அறிவுறுத்தல் செயலமர்வு நடாத்துதல்
- பிரதேச காணிப்பயன்பாட்டு திட்டம் தயாரிக்க செயற்றிட்டத்தை திட்டமிடலும் அமுல்படுத்தலும்.
- அரிப்புக்குட்பட்ட காணிகளை புனருத்தாரனம் செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பித்தல்..
- கிராமிய மட்டத்தில் காணிப்பயன்பாட்டு திட்டம் தயாரித்தல் அமுல்படுத்தல்.
- காணிப்பயன்பாட்டு பிணக்குகளுடன் காணிக்கான விசேட செயற்றிட்டம் திட்டமிடலும் அமுல்படுத்தலும்
- **காணி பயன்பாட்டு பிணக்குகளுடன் கூடிய காணிகளுக்குரிய விசேட வேலைத் திட்டத்தை திட்டமிட்டு அமுல்படுத்தல்**
- பல்வேறு தாபனங்களில் கிடைக்கப்பெறும் வேண்டுகோல் படி பல தேவைபாடுகளுக்கு காணிகள் இனங்காணப்பட்டு காணி மதிப்பீடு மேற்கொண்டு காணியின் இயலாற்றல் அறிக்கை வழங்குதல் .
- நிலையான பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டம்
- உப நீர்களை பிரதேச அடிப்படையாகக் கொண்டு காணிப்பயன்பாடு திட்டம் தயாரித்தல்.
- நீர் மற்றும் மண் காப்பீட்டிற்கு செயற்றிட்டம் அமுல்படுத்தல்.
- காணி பயன்பாட்டிற்குரிய விசேட கற்கையை மேற்கொள்ளல்.

12. காணி, விவாக, பிறப்பு, இறப்பு, பதிவாளர் அலுவலகம் - ஹம்பாந்தோட்டை

தொலைநோக்கு: பேண்தகு அபிவிருத்தியின் மூலம் பயனுள்ள அரசசேவையினை வழங்குதல்.

பணி: இலங்கையின் அசையும் அசையாச் சொத்துகளுக்குரிய சட்டரீதியான ஆவணப்பதிவு செய்தல் மற்றும் வாழ்வின் அடிப்படையான வீட்டு நிகழ்வுகளான திருமணம், பிறப்பு, இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்தல் மற்றும் அவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் மூலம் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களுக்கு உதவுதல்.

நோக்கமும் குறிக்கோளும்:

சிறந்த, செயற்திறனுள்ள மற்றும் நட்புறவான பொதுமக்கள் சேவையை பேணுவதன் மூலம் பெறப்படும் இனைத்து உறுதிகளினதும் பணிகளை அன்றைய தினமே பூர்த்தி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அனைத்து பிரித்தெடுப்புக்களின் பிரதிகளுக்கான விண்ணப்பம் தொடர்பில் 20 நிமிடத்திற்குள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் எமது நோக்கம் ஆகும்.

13. தொழில் வழி காட்டல், மனிதவளப் பிரிவு

தொலைநோக்கு: உலகலாவிய இலங்கையர்களைக் கொண்ட தொழிற்படை

பணி: ''பரந்த நிபுணத்துவம் மிக்க சுருசுருப்பான மற்றும் பூகோள ரீதியாக போட்டித்தன்மை வாய்ந்த ஊழியர் படையொன்றை கட்டியெழுப்புதல். எமது மனித வளங்களின் முழுப் பலத்தினையும் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்துதல்''

நோக்கங்களும் இலக்குகளும்:

- பூகோள ரீதியாக போட்டித்தன்மை, நிபுனத்துவம் மற்றும் பல்வேறு வகையான ஆற்றல்களைக் கொண்ட இலங்கை ஊழியப்படை யொன்றைக கட்டியெழுப்புதல்.
- தொழிலின்மையை குறைப்பதற்கு பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
- முறையான முழுமையான ஊழிய சந்தை தகவல் தளம் ஒன்றை ஏற்படுத்தல்

நிறைவேற்றப்படும் பணிகள்:

- தேசிய மனித வளக் கொள்கையை தயாரித்து கொள்கையையும் உரிய நிகழ்சித் திட்டங்களையும் அமுல்படுத்தல்.
- திறன்கள் பொருத்தமின்னை எனும் கட்டமைப்பு ரீதியான சேவைத் தொழிலின்மை சிக்கலைத் தீர்த்தல்.

- தற்போதைய ஊழியப்படைக்குரியதும் எதிர்காலத்தில் உழியச்சந்தைக்கு இணைவதற்குரிய சகல இலங்கையருக்கும் சரியான தொழில் திசைமுகப்படுத்தலை உறுதிபடுத்திக்கொள்வதற்கு வசதியளித்தல்
- மனித வலுவைத்திட்டமிடல் அபிவிருத்தியும் எதிர்வுகூறலும்.
- முறைமையில்ல துறைகளை அபிவிருத்தி செய்தல்.
- தனியார் துறை தொழில்களுக்கு தொழில் சுபேட்சகர்களை ஊக்குவித்தல்.
- சுதந்திர அரச தொழில் வேலையை பெற்றுக்கொடுத்தல.
- இக்கட்டுக்குள்ளான குழுக்கள் வலது குறைந்தோர் மற்றும் அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களில் வாழும் ஆட்களுக்கு மனிதவலு சேவை வசதி வழங்குதல்
- கோளமய மறறும் தேசிய ரீதியாக சரியான உழியச்சந்தை தகவல் அனைத்தையும் இலங்கையருக்கு பெற்றுக்கொடுத்தல் .
- உள்நாட்டு மற்றும் பூகோள சந்தை வாய்ப்பினை எதிர்வுகூறல்

14. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

தொலைநோக்கு : மிகவும் பாதுகாப்பான இலங்கையை நோக்கி

பணி: இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களை வினைத்திறனுடன் தடுத்தல் மற்றும் குறைப்பதனூடாக அமைதியானதும் சுபீட்சமானதும் கௌரவமானதுமான மனித வாழ்வுக்குரிய ஒரு வாழ்விடத்தை இலங்கையில் உருவாக்குதல்.

நோககங்களும் குறிக்கோள்களும்:

அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தும் முகமாக அமைச்சின் நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு 03 பிரதான துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இயற்கை மற்றும் மானிட செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து மக்களது உயிர்கள், உடைமைகள் சேவைகளைப் பாதுகாத்தல். (தடுத்தல், குறைத்தல், முன்னாயத்தம், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்) உன்னதமான ஒரு சமூகத்திற்காக மக்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் (அபாய முன் எச்சரிக்கை, அவசர செயற்பாடுகள், காப்பாற்றுதல் மற்றும் நிவாரண சேவைகள்) அனர்த்தங்களின் பின்னரான அனர்த்தங்களைக் குறைப்பதற்கான வசதிகளை வழங்குதல். (வழமை நிலைக்கு கொண்டு வரல், புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு)

நிறைவேற்றப்படும் பணிகள்:

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக 2010 நவம்பர் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் அமைச்சிடம் கீழே குறிப்பிடப்படும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் முகாமை செய்தல், அனர்த்தங்களைக் குறைத்தல், பதில் தெரிவித்தல், மற்றும் மீட்பு பணிகள் தொடர்பான கொள்ளைகள், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம் தயாரித்தல், ஏற்புடைய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் இனக்கம் தெரிவிக்கப்பட்ட காலஎல்லை மற்றும் வரவு செலவுக்கு உட்படுத்தப்பட்ட வளங்களின் அளவிற்குள் மேற்குறித்த கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், வழிநடாத்தல், தேசிய கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் அவசர நிலைமை செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், அனர்த்தங்களைக் குறைத்தல், பதில் தெரிவித்தல் மற்றும் மீட்பு பணிகள் தொடர்பான வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல். மேற்குறித்த பணிகள் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்தல். இயற்கை அனர்த்தம் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல். வெள்ளம், வரட்சி, மண்சரிவு, கொள்ளை நோய்கள் மற்றும் ஏனைய விசேட காரணங்களினால் ஏற்படும் அனர்த்தங்களின் போது நிவாரணம் வழங்குதல். இயற்கை அனர்த்தம் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின் போது மீட்பு நடவடிக்கைகளை செயற்படுத்தல். முன்னபாய எச்சரிக்கை முறைமையை நடைமுறைப்படுத்தல். வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணிப்பு தொழில்நுட்ப துறை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகள், வளிமண்டலவியல் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள், அமைச்சின் மேற்பார்வையின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் ஏனைய அனைத்து விடயங்கள் மற்றும் மேற்பார்வைப் பணிகள். அனர்த்தங்களைக் குறைக்கும் கருத்திட்டங்கள், அனர்த்த முன்னாயத்தம் மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், அவசர பதில் தெரிவிப்புக்கள்.

15. கலாசாரப் பிரிவு

தொலைநோக்கு :

அமைதி நிறைந்த விருத்திடைந்த சிறந்த மனிதர்களைக் கொண்ட ஒரு தேசத்தை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்

பணி: தனித்துவ இலங்கையின் அடையாளத்துடன் கூடிய கலை இலக்கிய மற்றும் கலாசார பண்புகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் பரப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் கலாசார நடவடிக்கைகளை செயற்திறனுடனும் பயனுள்ளவாறும் நடைமுறைப்படுத்தல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் இலக்கியக் கலையினைப் பாதுகாத்தல் மற்றும் பிரச்சாரத்துடன் தொடர்புடைய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களை கலாசாரத்தின் அங்கத்தவர்கள் எனக் கருதி அவர்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் அவர்களது படைப்புக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைப் பல்கலாசார மாவட்டமாக கருதி சகல துணைக் கலாசாரங்களுக்கும் நியாயமான முறையில் அவர்களது கலை மற்றும் கலைநுட்பங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் பிரச்சாரத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் கட்புல மற்றும் கட்புலனற்ற கலாசார அங்கங்களுக்கு புத்துயிர் அளித்து அவை சமூகத்தின் சகல துறைகளுக்கும் சென்றடையும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதன் மூலம் பண்பாடுகள் நிறைந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.

16. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

தொலைநோக்கு:

இலங்கை நாட்டு சிறுவர்களுக்கான சிறுவர் நேயம் கொண்ட பாதுகாப்பான ஒரு சூழலை உருவாக்கும் சிறப்பான கேந்திர நிலையமாக மாற்றுதல்.

பணி: சகல விதமான துஸ்பிரயோகங்களிலிருந்தும் இலங்கையின் அனைத்து சிறுவர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

நோக்கங்கள்:

- சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுத்தல், சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புதல் ஆகிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தேசிய கொள்கையினை தயாரிக்கத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- மாவட்டத்தில் சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான ஏனைய அனைத்து செயற்பாடுகள் தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

17. சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவு

தொலைநோக்கு:

பேண்தகு அபிவிருத்திக்கான முயற்சியான்மையும் வணிக அபிவிருத்தியும்.

பணி: இளைஞர் யுவதிகளை முயற்சியான்மைத் துறையில் ஈடுபடுத்துவதனூடாக தொழிலின்மையைக் குறைத்து நவீன சவால்களுக்கு முகங்கொடுக்க முடியுமான நிலையான சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சித் துறையின் பங்களிப்பினை தேசிய பொருளாதாரத்திற்குள் ஒன்று சேர்த்தல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

- வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தல்.
- உறுதியான முயற்சியான்மை கலாசாரத்தை கட்டியெழுப்புதல்
- வெற்றிகரமான தொழில் முயற்சியை கட்டியெழுப்ப இளைஞர் யுவதிகளுக்கு ஒத்துழைப்பு நல்குதல்.
- சிறுதொழில் முயற்சியில் ஈடுபடும் இளைஞர் யுவதிகளுக்கு அத்தொழில் முயற்சியை மேம்படுத்த அவசியமான ஆலோசனைகளை வழங்குதல்.
- சிறு கைத்தொழில் அபிவிருத்தி துறைக்குரிய அரச கொள்கையினை மேம்படுத்த ஒத்துழைப்பு வழங்குதல்
- சிறு தொழில் முயற்சிக்குரிய சந்தை வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்..
- ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.
- பல்வேறு துறைகளுக்கு ஏற்புடையவாறு தொழில் முயற்சியாளர்களை பயிற்றுவித்தல்

18. சமூக பாதுகாப்பு சபை

தொலைநோக்கு:

பயனுள்ள பேண்தகு சமூக பாதுகாப்பிற்கான தேசத்தின் முன்னோடி நிறுவனமாக மாற்றமடைதல்.

பணி:பங்குபற்றல் மற்றும் ஆக்கபூர்வ ஒழுங்கமைப்பு சூழல் மூலம் அரச பாதுகாப்புடன் கூடிய மிகவும் பயனுள்ள சமூக பாதுகாப்பு முறைகளை நடைமுறைப்படுத்தும் தேசிய நிறுவனமாகி மாற்றம் பெற்று சுதந்திர பிரஜைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்தல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரச ஓய்வூதியம் பெறாத மக்களுக்கு அறிவூட்டுதல்.

நிறைவேற்றப்படும் பணிகள்:

மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மாவட்டத்தில் வாழும் இலக்கு சமூகத்தை அறிவூட்டுதல் மற்றும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

19. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

தொலைநோக்கு:

அரச நிதிக் கொள்கைகளுக்கு அமைவாக சிறந்த அரச சேவையை பேணிச் செல்வதற்கு பங்களிப்புச் செய்தல்.

பணி: மாவட்ட செயலக அதிகார கட்டமைப்பிற்குரிய அரச நிறுவனங்கள் அரச நிதிக் கொள்கைகளுக்கு அமைவாக செயற்படும் ஒரு வழிகாட்டிகளாக ஒரு சுயாதின தரப்பினராக சேவை வழங்குவதன் மூலம் மாவட்டத்தில் சிறந்ததோர் அரச சேவையை பேணிச் செல்லல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

- அரச கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக உள்ள கணக்காய்வினை பேணுதல்.
- பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்குத் தேவையான சூழலைக் கட்டியெழுப்புதல்.
- பொது மக்களுக்கான சிறந்த அரச சேவை வழங்கப்படுகிறதா எனக் கண்டறிதல்
- அரச நிறுவனங்களுக்குத் தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் வழிகாட்டலை வழங்குதல்
- அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை.

நிறைவேற்றப்படும் பணிகள்

- ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் வவுச்சர்களைப் பரீட்சித்தல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நடாத்துதல் மற்றும் பிரதேச செயலகங்களில் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்களில் பங்குபற்றுதல்.
- நிதி மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்.
- மாவட்ட செயலாலரால் ஒப்படைக்கப்படும் விசேட கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.
- விசாரனை நடவடிக்கைகள்

20. உற்பத்தி திறன் மேம்பாட்டு அலகு

தொலைநோக்கு:

உற்பத்திதிறன் மேம்பாட்டில் ஆசியாவின் மிகச்சிறந்த கேத்திர நிலையமாக மாறுதல்.

பணி: இலங்கையில் உற்பத்திதிறனை மேம்படுத்துவதன் மூலம் சர்வதேச போட்டித்தன்மைக்கு முகங் கொடுப்பதற்குத் தேவையான பலத்தை வழங்குதல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் மக்களக்கு உயர்வான வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

குறிக்கோள்கள்:

- முதன்மையானது நுகர்வாளர் ஆவார்..
- அறிவுப் பரிமாற்றம்.
- கற்றல் கலாசாரம்
- குழுச் செயற்பாடுகள்
- பயனுள்ள மற்றும் தரமானதொரு சேவை.
- தேசிய அபிவிருத்திக்கு முன்னுரிமை

21. பௌத்த அலுவல்கள் பிரிவு

தொலைநோக்கு:

''பௌத்த மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் அறநெறியுடைய சமூகம் ஒன்றை நோக்கி''

பணி: புத்த சாசனத்தில் பாரம்பரிய மேம்பாடு மற்றும் உயர்வுக்கான பணிகளை உரியவாறு ஒழுங்கமைத்து அமுல்படுத்துவதன் மூலம் உள்நாட்டு பௌத்த மக்களின் எழுச்சிக்கு காரணமாக அமைகின்ற நல்லொழுக்கமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குதல் மற்றும் முன்மாதிரியான பௌத்த சமூகம் ஒன்றின் இடையறா இருப்புக்கு வழிவகுத்தல்.

நோக்கங்களும் குறிக்கோள்களும்:

- மாவட்டத்தின் சகல விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி நிகழ்ச்சித் த்திட்டங்களில் உள்ளடக்கல்.
- மாவட்டத்தில் இடம்பெறும் பண்பாட்டுக்கு முரணான செயற்பாடுகளைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல்.
- அறநெறிப் பாடசாலை பரீட்சை முடிவுகளின் பிரகாரம் அகில இலங்கை ரீதியில் மாவட்டத்தை முதலாம் இடத்திற்கு கொண்டு வரல்.
- மாவட்டத்தின் அனைத்து விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு ஒரே விதமான நன்மை பெறுவதற்கு வழிவகுத்தல்.
- பௌதீக மற்றும் ஆன்மீக ரீதியாக சமநிலையான அபிவிருத்தியுடன் கூடிய ஒரு மாவட்டமாக மாற்றுதல்.
- பௌத்த தேரர்களின் ஆலோசனைக்கு அமைய அனைத்து மத நகழ்ச்சிகளையும் உரியவாறு ஒழுங்கமைத்தல்.

நிறைவேற்றப்படும் பணிகள்:

- மாவட்டத்தின் 12 பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் 15 சாசனப் பாதுகாப்பு சபைகளை ஒருங்கிணைத்தல்.
- மாவட்டத்தின் சகல விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு உதவி வழங்கும் பணிகளை மேற்கொள்ளல்.
- அறநெறி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தலும் தகவல்களை இற்றைப்படுத்தலும்.
- மாவட்டதின் சாசனப் பாதுகாப்பு சபை கூட்டங்களைக் கூட்டுதல், அறிக்கைகளை பேணுதல்.
- பௌத்த தேரர்களின் கோரிக்கைகளை ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்புதல், பின்னாய்வு செய்தல்
- வருடாந்த அறநெறி ஆசிரியர், மாணவர் தகவல்களை இற்றைப்படுத்தல்.
பலமான உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல், பூர்த்தியான மற்றும் பேண்தகு கைத்தொழில்மயப்படுத்தலை மேம்படுத்திய நவீனமயப்படுத்தலை ஊக்குவித்தல்	பொருளாதார அபிவிருத்தி மற்றும் மானுட நல்லிருப்புக்கால அனைவருக்கும் பெற்றுக்காள்ள முடியுமான மற்றும் பிரவேசிக்க முடியுமாக இருத்தல் பற்றி கவனம் செலுத்தி பிராந்திய மற்றும் தேசிய தேச எல்லைகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் உட்டகட்டமைப்பு வசதிகளும் உள்ளடங்களாக தர ரீதியாக உயர் விசுவாசமான பேண்தகு மற்றும் அனர்த்தங்களைத் தாங்கக் கூடிய உட்டகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய பிரதச செயலக கட்டடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அளவுகள்	30%		
	2030 ஆண்டளவில் உட்டகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கைத்தொழில்களை பேண்தகு நிலைக்கு கொண்டுவருவதற்கான நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக அபிவிருத்தி செய்தல். கைத்தொழில் செயன்முறையில் வளங்களை செயற்திறனுடன் பயன்படுத்துவதை மேம்படுத்துதல் மற்றும் தூய்மையான மற்றும் சூழலுக்குப் பொருத்தமான தரத்தில் கூடிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்காக சகல நாடுகளும் அவர்களிடம் உள்ள இயலுமைக்கு ஏற்ப இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்	ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளின் எண்ணிக்கை		50%	

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்களில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் மாவட்ட செயலக செலவுத் தலைப்பு (263) இன் கீழ் அலுவலகங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு செலவு செய்யப்படுவதுடன் சகல அமைச்சுக்கள் தொடர்பான பிரதேச செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கல் மற்றும் அது தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன் பிரகாரம் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் பலவற்றை நிறைவேற்றுவற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அத்தியாயம் 06 - மனித வள விபரம்

06.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம் / (அதிகப்படியான)**
சிரேட்ட	9	9	-
மூன்றாம் நிலை	4	1	3
இரண்டாம் நிலை	67	72	5
ஆரம்ப நிலை	23	21	2

06.1 **பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுரக்கமாகக் குறிப்பிடுக

முகாமை செய்ய இயலாத அளவு மனித வளப் பற்றாக்குறை காணப்படாத காரணத்தால் அப் ˙ பற்றாக்குறை அல்லது அதிகப்படி செயலாற்றுகை மீது தாக்கம் ஏற்படுத்தவில்லை.

06.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எணிக்கை	நிகழச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா ‘000)		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு ∴வெளிநாட்டு)	வெளயீடு ∴ பெற்றுக்கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு		
அரச பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்	1	60 hours	30		உள்நாட்டு	அரச பெறுகை மற்றும் சொத்து முகாமைத்துவம் தொடர்பான அறிவு
பிரதேச செயலகங்களின் ஊடக உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் ஊடகப் பயிற்சி செயலமர்வு	31	1 day	7.02		உள்நாட்டு	ஊடகவியல் தொடர்பான அறிவு
ளுனுகுடு நிறுவனம் மூலம் நடாத்தப்படும் ஆரம்ப விசாரணை பயிற்சிகள் தொடர்பான பயிற்சி செயலமர்வு	1	2 day	8.5.		உள்நாட்டு	ஆரம்ப விசாரணைகள் தொடர்பான அறிவு
ளுடுஜனுயு நிறுவனம் மூலம் நடாத்தப்படும் கணணிப் பாடநெறி	40	4 month	102.6		உள்நாட்டு	அலுவலக மென்பொருள் பாவனை தொடர்பான அறிவு
தாபன விதிக் கோவை தொடர்பான பயிற்சி செயலமர்வு	60	32 day	21.86		உள்நாட்டு	தாபன விதிக் கோவை தொடர்பான அறிவு
நிறுவனம் சார் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி செயலமர்வு	60	32 day	22.27		உள்நாட்டு	நிறுவனம் சார் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான அறிவு
அலுவலக முகாமைத்துவம் மற்றும் ஒழுக்காற்று தொடர்பான பயிற்சி செயலமர்வு	230	32 day	131.15		உள்நாட்டு	அலுவலக முகாமைத்துவம் மற்றும் ஒழுக்காற்று தொடர்பான அறிவு
அலுவலக முகாமைத்துவம்	85	32 day	22.67		உள்நாட்டு	அலுவலக முகாமைத்துவம் தொடர்பான அறிவு
தரவு முறைமை முகாமைத்துவம் (னுடீஆளு)	13	32 day	35.12		உள்நாட்டு	தரவு முறைமை முகாமைத்துவம் தொடர்பான அறிவு

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது /இணக்கமற்றது	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கை	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	-		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதானாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.9	இழப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரத்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் *(NDB)* உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமற்றது		

6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி. 134 (2) டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் காணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் தகவல்களையும் 134 (3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி.எம.ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன	இணக்கமானது		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		

9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழம வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத்தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமற்றது		

13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்மை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	இணக்கமானது		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமற்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள் / குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்	இணக்கமானது		

17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2018 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையிலன் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமற்றது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தலுக்குப் பொறுப்பாக ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		

முற்றும்

Annex I

எனது இலக்கம் : எச்எம்பீ/ஏ/ஹ.மா.செ./நி கூ./2021 2022 மே ஆம் திகதி

கணக்கீட்டு உத்தியோகத்தர்
ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விவரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பிரிவுகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்தம் மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக மிகவும் பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள விதத்தில் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 **நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக மாவட்ட செயலக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை

- வெளிக்கொணர்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென,

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவூட்டப்பட்டது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) ஏனைய செலவுத் தலைப்புக்கள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட வருமானப் பெறுகைகள் 2020 டிசம்பர் 31 ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டில் அவ்வாறான பெறுவனவுகள் முற்பணப் பெறுவனவு இணக்க கூற்றில் (ஏ.சீ.ஏ – 07) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் நிதச் செயலாற்றுகை கூற்றின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் செம்மையாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டாலும் அது தொடர்பான வெளிக்கொணர்வுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

1.6.1.1 மீண்டெழும் செலவினம்

கருத்திட்டம் 1 வரி வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வரி (1404) செலவுத் தலைப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்காக செலுத்தப்பட்ட ரூ.592,181 தொகை மதிப்பீட்டு வரி மீளாய்வு ஆண்டின் செலவினமாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

1.6.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்

(அ) திணைக்கள புத்தகங்கள் பிரகாரம் (சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம) ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூ. 5,761, 799,147 ஆக இருந்த போதும் 2021 டிசம்பர் 31 ல் நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் இப் பெறுமதி ரூ.5,761,155,643 என்பதால் நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி ரூ.643,504 எனக் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் கோவை ஏ.சீ.ஏ.06 மாதிரிக்கு இணைத்துக் காட்டப்பட வேண்டிய புதிய CIGAS இணைய உள்ளீடு மூலம் உருவாக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கைக்கு பதிலாக திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்கள் SA 82 சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 <u>முற்பண முகாமைத்துவம்</u>

கணக்கு இலக்கம் 7002-0-0310-0-21-0 முற்பணக் கணக்கில் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ரூ.4,820,762,447 ஆக காணப்பட்டாலும் திறைசேரி புத்தகங்கள் பிரகாரம் அப் பெறுமதிகள் ரூ.4,903,492,447 ஆக காணப்பட்டதால் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ரூ.82,730,000 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

2.1. செலவு முகாமைத்துவம்

2.1.1 ஒதுக்கீட்டு மீதி

---

10 செலவு விடயங்களில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை இடைவெளியில் வருடாந்த தேறிய ஒதுக்கீடு மீதி காணப்பட்டது.

2.2.2 மதிப்பீட்டைத் தயார் செய்தல் மற்றும் ஒதுக்கீட்டுப் பயன்பாடு

இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவையின் நிதி ஒழுங்குவிதி 50 (ii) பிரகாரம் மதிப்பீட்டை தயாரிக்கும் போது இயலுமான வரை பூரணமானதும் சரியானதுமாக தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமானாலும் அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்காமையால் நிதி ஒழுங்குவிதி 66 பிரகாரம் செலவு விடயங்களுள் ரூ.3,469,500 ஒதுக்கீடு மாற்றப்பட்டிருந்தது.

2.2.3 ஒதுக்கீடுகளை அதிகரித்தல்

(அ) 2 செலவு விடயங்களுக்கான வருடாந்த மதிப்பீடு மூலம் போதியளவு ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை என்பதால் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையில் 34 சதவீதம் மற்றும் 1493 சதவீதம் நிதி ஒழுங்கு விதி 66 மூலம் ஒதுக்கீடுகள் மாற்றப்படவில்லை.

(ஆ) 3 செலவு விடயங்களுக்கான குறைநிரப்பு மதிப்பீடு மூலம் பெற்றுக்கொண்ட ரூ.522,500,000 ஒதுக்கீடு ஏசீஏ2(III) மாதிரி மூலம் திருத்தம் செய்வதற்கான காரணங்களுடன் வெளிப்படுத்தப்படவில்லை

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

(அ) இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு நிதி ஒழுங்குவிதிகள் 94(1) இற்கு இணங்காதவாறு 02 செலவு விடயங்களின் மீதிக்கு மேலதிகமாக ரூ.77,715 பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தன.

(ஆ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் ரூ.3,250,031 பொறுப்புக்களை உள்ளடக்கி சிகாஸ் கணக்கீட்டு முறைமை இற்றைப்படுத்தப்படவில்லை. மேலும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை அறிக்கையிடுவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் இனையதளத்துக்கு இத் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்படவில்லை.

2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு

ஏனைய அமைசசுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் மூலம் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூ.4,479,634 தொகை ஒதுக்கீடுகளில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூ.153,621,768 மீதியாக காணப்பட்டது.

2.5 சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை

சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்	இணங்காமை
இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவை	
அ) நிதி ஒழுங்குவிதி 237	சூரியவெவ பிரதேச செயலகம் மூலம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பொருட்கள் உள்ளடங்கிய 1764 பொதிகளுக்காக ரூ.17,595,000 செலவு செய்யப்பட்ட போது அராங்கத்துக்குப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதனை உறுதி செய்யாது வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
(ஆ) நிதி ஒழுங்குவிதி 767(1)	2013 ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் லுனுகம்வெஹெர பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட 5 வகையான நிவாரண உதவிகளில் 191 அலகுகள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.
(இ) அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2013 ஜுலை 05 ஆம் திகதிய HAF-3-ADMIN ஆம் இலக்க கடிதம்	அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தின் 06 பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் மீளாய்வு ஆண்டுக்காக காணிகள் தொடர்பில் அனுமதியற்ற கைப்பற்றுதல்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.6 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

(அ) பணித்தடை செய்யப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31ல் அறவிடப்பட வேண்டிய ரூ.719,018 கடன் நிலுவை அறவிடப்படவில்லை என்பதுடன் அவற்றுள் ரூ.485,838 கடன் நிலுவை 05 ஆண்டுகளை கடந்துள்ளது.

(ஆ) கடமை வெறிதாக்கிய 03 உத்தியோகத்தர்களிடம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31ல் அறவிடப்பட வேண்டிய ரூ.314,515 கடன் நிலவை அறவிடப்படவில்லை என்பதுடன் அக் கடன் நிலுலை தொடர்பில் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4:5 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) காலஞ்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கான மொத்தம் ரூ.178,298 கடன் நிலுவை மீளாய்வு ஆண்டில் அறவிடப்படவில்லை.

2.7 வைப்புக்கள்

ரூ. 13,978,130 பெறுமதியுடைய 02 மற்றும் 04 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 154 வைப்புக்கள் மற்றும் ரூ.645,649 பெறுமதியுடைய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 05 வைப்புக்கள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கபடவில்லை.

2.8 வங்கி கணக்குகளை பேணிச் செல்லல்

பெலிஅத்த இலங்கை வங்கிக் கிளையில் பேணிச் செல்லப்பட்டு வரும் நடைமுறைக் கணக்கிற்காக 2021 டிசம்பர் 31ல் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்று பிரகாரம் வங்கி மீதி ரூ.26,121,357 ஆக காணப்பட்ட போதும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு (VIII) பிரகாரம் அந்த மீதி பிழையாக ரூ.113,027 ஆக காட்டப்பட்டிருந்தது.

3. வழிநடாத்தல் மீளாய்வு

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்ளாமை

கொங்கிரீட் தரைக் கற்கள் பதித்து மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்

(அ) 09 பிரதேச செயலகங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட கொங்கிரீட் தரைக் கற்கள் பதிக்கப்பட்ட 163 வீதிகளில் மாவட்ட பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட விலைப் பகுப்பாய்வில் காட்டப்பட்டுள்ளவாறு ஓரங்களை வெட்டுதல் (Edge Cutting) மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் அதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு மொத்தம் ரூ.5,156,984 மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கொங்கிரீட் தரைக் கற்கள் வீதி நிர்மாணித்தல் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் கனவளவு 100 மி.மீற்றர் ABC இடுவதற்கு திட்டமிடப்பட்ட போதும் அதற்கு ஏற்புடைய வகையில் வீதி நிர்மாணிக்கப்படவில்லை என அதாவது ABC கனவளவு 90 இற்கு குறைவான வீதிகள் காணப்பட்டதாக கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது. அதன் பிரகாரம் 07 பிரதேச செயலகங்களின ஒப்பந்தக்காரர்களால் உரிய தர நியமங்களுக்கு ABC இடப்படாத வீதிகளுக்காக மொத்தம் ரூ.4,112,657 கூடுதலாக செலுத்தப்படடை காரணமாக அரசுக்கு நிதி ரீதியான நட்டம் விளைவிக்கப்பட்டிருந்தது.

(இ) 08 பிரதேச செயலகங்களில் ஒப்பந்தக்காரர்களால் உரிய தரநியமங்களுக்கு கருங்கற் தூள் இடப்படாத வீதிளுக்காக மொத்தம் ரூ.56,310 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இக் கருத்திட்டத்தின் கீழ் கொங்கிரீட் தரைக் கற்கள் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 03 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 05 வீதிகளுக்கு ஒரு இலட்சம் கிலோ மீற்றர்கள் கருத்திட்டத்தின் கீழ் காபட் இடுவதற்கு தேவையான பரிந்துரைகள் மற்றும் அனுமதிகள் ஏற்புடைய பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்பட்ட காரணத்தால் கொங்கிரீட் தரைக் கற்கள் பதிக்கும் கருத்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட மொத்தம் ரூ.3,464,998 செயற்பாடற்ற செலவாக காணப்பட்டது.

(உ) மாவட்ட செயலகத்தின் மாவட்ட பொறியியலாளர் மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களால் நிதி ஒழுங்குவிதிகள் 135, 136, 137, 138 பிரிவுகளுக்கு ஏற்புடையதாகாத வகையில் முறைசாராத கொடுப்பனவுகளுக்கு மற்றும் ஒப்பந்தக்காரர்களால் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக செலுத்துவதற்கு தேவையான பரிந்துரைகள் மற்றும் சான்றுப்படுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மொத்தம் ரூ.9,325,951 மேலதிகமாக செலுத்துதல் காரணமாக அரசுக்கு நிதி ரீதியான நட்டம் விளைவிக்கப்பட்டிருந்தது.

3.2 பெறுகைகள்

ரூ. 6,853,077 தொகைக்கு மதிப்பிடப்பட்ட அங்குனகொலபெலெஸ்ஸ நகரத்தின் நீர் அகற்றும் வடிகான் முறைமையினை நிர்மாணிக்கும் கைத்தொழிலுக்கான விலைமனுக்களைக் கோரும் போது விலைமனுதாரர்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு 03 வாரங்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டிய போதும் 04 வேலை நாட்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் விலைமனு ஆவணங்களின் பிரகாரம் பொருத்தமான ஒப்பந்தக்காரரின் ஆகக் குறைந்த தகைமை நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் சீ 7 தொகுதியில் பதிவு செய்யப்பட வேண்டிய போதும் அதடதகைய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத 02 நிறுவனங்கள் மூலம் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தது.

3.3 சொத்து முகாமைத்துவம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்பட்ட சுனாமி ரிகன்ஸ்ரக்ஷன் பிரிவு மூலம் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட WPMC-7931 மற்றும் WPMC-7933 ஆகிய இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் 2017

ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்குமாறு அதன் மாவட்ட முகாமையாளரால் கோரப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டு இறுதியில் ஏற்புடைய மோட்டார் சைச்கிள்கள் பயன்படுத்தப்படாது பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

3.4 நிதி மோசடி வடிவில் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள்

பிரதம அமைச்சரது செயலாளரின் 2020 நவம்பர் 02 ஆம் திகதிய PTE/03/2020(VI) ஆம் இலக்க மற்றும் 2020 நவம்பர் 30 ஆம் திகதிய PTE/03/2020(VII) ஆம் இலக்க மற்றும் பிரதம அமைச்சரது மேலதிக செயலாளரின் 2021 மே 18 ஆம் திகதிய PTE/01/CTR-Progress/01 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாத 51 குடும்பங்களுக்கு ரூ.510,000 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டதாக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு வழங்குனர்களுக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இப் பொருட்கள் வழங்குனரிடம் பிரதேச செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டதாக மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களில் உள்ளடங்கும் குடும்பங்களுக்கு அப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதாக எத்தகைய தகசல்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

3.5 **நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

(அ) நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்று

1987 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற 22 சம்பவங்கள் தொடர்பாக மொத்தம் ரூ.1,266,193 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் மீளாய்வு ஆண்டு இறுதி வரை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நட்டங்கள் மற்றும் கைவிடுதல் ஆகியன உள்ளடக்கப்படாமை

நட்டங்கள் மற்றும் சேதங்கள் பற்றிய பட்டியலில் பதிவு செய்யப்பட்ட ரூ.80,664 தொகைக்கான 05 நட்டங்கள் மற்றும் கைவிடுதல் சம்பவங்கள் தொடர்பான கூற்று குறிப்பு – (1) இன் கீழ் சமர்ப்பிக்கப்படவில்லை.

3.6 பொருளாதார ரீதியற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஹம்பாந்தோட்டை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெல்ஜியம் வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் ஒழுங்கையின் எஞ்சிய பகுதிக்கு வடிகான் முறைமை ஒன்றைத் தயாரிக்கும் கைத்தொழிலின் ஒப்பந்த பத்திரத்தில் விலை மாற்றங்களுக்கான கொடுப்பனவு தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அதற்காக முறையான அதிகாரம் பெறப்படாது விலை மாற்றமாக ரூ.568,413 மேலதிக தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

3.7 முகாமைத்துவ குறைபாடுகள்

(அ) தங்காலை பிரதேச செயலகத்தில் சமுர்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் 2021/1 வழிகாட்டல் கோவையின் 7(II) பந்தியுடன் இணங்காதவாறு மாசிப் போரணைகளை தயாரிக்கும் போது தொழில்நுட்ப பிரமாணங்கள் பின்பற்றப்படாதிருந்த 50 பயனாளிகளுக்கு ரூ.100,000 வீதம் மொத்தம் ரூ.5,000,000 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

(ஆ) வெளியார் தரப்பினர்களினால் லுனுகம்வெஹெர பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச காணிகளை அனுமதியின்றி கைப்பற்றிய 06 சந்தர்ப்பங்கள் தொடர்பில் நீதிமன்றத்தால் அகற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதும் ஏற்புடைய காணிகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அரசுக்கு கையகப்படுத்தப்படவில்லை. மேலும் நீதிமன்றத்தால் அகற்றும் உத்தரவு பிறப்பித்தலை நிராகரித்து மீண்டும் வழக்குத் தொடுக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளரால் மினிஎத்திலிய கிராம உத்தியொகத்தர் பிரிவில் 5 அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்காக பிறப்பிக்கப்பட்ட அகற்றும் அறிவித்தல் (“அ” மாதிரி) பிரகாரம் அந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அகன்று செல்லவில்லை என்பதுடன் காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அகற்றும் கட்டளைக்கான கோரிக்கை (“ஆ” மாதிரி) மீளாய்வு ஆண்டின் இறுதி வரை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) சூரியவெவ மிரிஜ்ஜவில வீதி கருத்திட்டத்துக்காக 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அரசுக்கு கையகப்படுத்தப்பட்ட துண்டு இலக்கம் டீ-7377-ஏ பகுதிக்காக ரூ.1,887,000 நியதிச்சட்ட பெறுமதியை செலுத்துவதற்கான கால தாமதம் காரணமாக மீளாய்வு ஆண்டு இறுதி வரை வட்டித் தொகையாக ரூ.1,102,197 மேலதிக தொகை செலுத்த வேண்டி இருந்தது.

(உ) திஸ்ஸமகாராம பிரதேச செயலகம் மூலம் 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 337 வருடாந்த வாடகையில் ரூ.719,154 நிலுவைத் தவணை மற்றும் தண்டப்பணம் அறவிடப்படவில்லை.

(ஊ) புவிச் சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகம் மூலம் வழங்கப்பட்ட IML/A/HO/N/4314/LR/9 ஆம் இலக்க அகழ்வு அனுமதிப் பத்திரம் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை 5 ஏக்கர் 02 ரூட் அரச காணியில் வரி வாடகை மற்றும் கட்டணம் செலுத்தப்படாது நடாத்திச் செல்லப்படும் கருங்கல் தொழில் முயற்சி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அரச காணி நடவடிக்கை கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவு, 1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்ட உத்தரவின் 180 ஆம் பிரிவு மற்றும் சனாதிபதி செயலாளரின் SP/RD/02/10 ஆம் இலக்க மற்றும் 2010 பெப்ரவரி 03 ஆம் திகதிய அரச காணி முகாமைத்துவம்

தொடர்பான சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவுடன் இணங்காதவாறு அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு சூரியவெவ மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 196.1(vi) பிரிவின் பிரகாரம் மற்றும் சிரேஷ்ட மதிப்பீட்டாளரின் HT/ML/3485 ஆம் இலக்க மற்றும் 2022 ஜனவரி 19ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை 120 மாதங்களுக்காக மொத்தம் ரூ.3,280,000 தொகை வருடாந்த வரி வருமானம் அறவிடப்படவில்லை. எவ்வாறாயினும் காணியின் வருடாந்த வளர்ச்சியடையாத பெறுமதியினை 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை வருடா வருடம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் இழக்கப்படும் வருடாந்த வரிவாடகை வருமானம் மேலும் அதிகரிப்பதாக மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) அகழ்வு அனுமதிப்பத்திரக்காரரின் அறிக்கை பிரகாரம் அவரால் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட மொத்த கருங்கல் கியுப்களின் அளவு 173,586.2 ஆக அமைந்ததுடன் காடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 2009 மே 06 ஆம் திகதிய 1600/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 10(1) பந்தியின் பிரகாரம் அனுமதிப் பத்திர உரிமையாளரிடம் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூ.173,586,200 அரச கட்டணம் அறவிடப்படவில்லை. எவ்வாறாயினும் அனுமதிப் பத்திர உரிமையாளரால் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட மொத்த கருங்கல் கியுப்களின் அளவு எவ்வளவு என்பது பற்றி இனம் காண்பதற்கு நிபுணத்துவ அறிக்கை பெற்றுக்கொள்ள வேண்டி இருப்பினும் அதற்கு இணங்க மேலும் அறவிடப்பட வேண்டிய அரச கட்டண அளவு இனம் காணப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(iv) புவிச் சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகம் மூலம் வழங்கப்பட்ட அகழ்வு அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்காது ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் மூலம் வெடிக்கும் பொருள்களுக்கான அனுமதிப் பத்திரத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 27,100 மின்சார டெட்டோனேட்டர்கள் முறைசாராத ரீதியில் வழங்கப்பட்டிருந்தது.

4. நல்லாட்சி

4.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

(அ) சூரியவெவ பிரதேச செயலகத்தால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.17,595,000 இற்கான பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் போது உரிய பொருட்கள் தகைமை பெற்ற பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள் உள்ளிட்ட ஆவணம் பேணப்படவில்லை. மேலும் ஏற்புடைய பொருட்களை பயனாளிகளுக்கு பகிர்ந்தளித்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்டதனை உறுதிசெய்யும் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் உரிய பொருட்கள் முழுமையாக மற்றும் சரியான பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக உறுதிசெய்யப்படவில்லை.

ஆ) பிரதம அமைச்சரது மேலதிக செயலாளரின் 2021 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய PIE/03-2021(III) ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்காதவாறு சூரியவெவ பிரதேச செயலகத்தால் குறைந்த வருமானம் பெறுபவர்களாக உறுதி செய்யப்படாத குடும்பங்களுக்காக குறைந்த வருமானம் பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ரூ.3,200,000 இற்கான 320 பொருட் பொதிகள் பகிர்நதளிக்கப்பட்டன.

5. மனித வள முகாமைத்துவம்

2021 டிசம்பர் 31 ல் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான, மேலதிக மற்றும் வெற்றிடம் நிலவும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

சேவை வகுதி	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உண்மை ஊழியர் எண்ணிக்கை	வெற்றிட எண்ணிக்கை	மேலதிக எண்ணிக்கை
i. சிரேஷ்ட நிலை	62	60	03	01
ii. மூன்றாம் நிலை	38	25	13	-
iii. இரண்டாம் நிலை	1761	1730	136	105
iv. ஆரம்ப நிலை	112	107	06	01
மொத்தம்	**1973**	**1922**	**158**	**107**

மீளாய்வு ஆண்டின் இறுதியில் பதவியணியில் 158 வெறடறிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் 107 மேலதிக உத்தியோகத்தர்கள் முறைசார்ந்த ரீதியில் அங்கீகரிக்கப்படாது கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

கே.எச்.யு.டீ. சரத் குமார
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்
கணக்காய்வாளருக்குப் பதிலாக.